1982 மார்ச் 1]

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு இல்லங்கள் மேலும் 5 இடங்களில் தஞ்சை மாவட்டத்திலே கட்டப்பட இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, புயல், பாதுகாப்பு இல்லங்கள் எல்லா இடங்களிலும் கட்டப்படுகின்றன. அப்போது தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு பகுதியில் நிச்சயமாகக் கட்டப்பட மாட்டாது.

ஆசிரியர்களுக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டிய 'அடடா' பணம்.

* வினா எண் 285—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அவசர காலத்தில் ஆசிரியர்களிடமிருந்து அவசரமாக வசூலிக்கப்பட்ட அடடா (Adada) பணம் இன்னும் திருப்பிக் கொடுக்காமல் பல ஆசிரியர்கள் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) குறிப்பாக தனியார் துறை ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதால் அரசு துரித நடவடிக்கை எடுத்து திருப்பிக் கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசுப் பள்ளி ஆசிரியர் அனைவருக்கும் திருப்பி அளிக்கப்பட்டு விட்டது என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) தனியார் பள்ளி ஆசிரியர்களின் (ADADA) அடடா சம்பந்தமான நடவடிக்கைகள் யாவும் மத்திய அரசின கீழ் இயங்கும் பிரதேச காப்பு நிதி ஆணையரால் (Regional Provident fund commissione) நிர்வகிக்கப்படுகிறது. இவ்வைப்புத் தொகை மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதல்ல. பள்ளி நிர்வாகம் நேரடியாக பிரதேச ஆணையருடன் தொடர்புகொண்டு இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[முற்பகல் 9—20].

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த அடடா பணம் 1975 ஆம் ஆண்டே வசூல் செய்யப்பட்டது. இன்று வரைக்கும் அது பல இடங்களில் கொடுக்கப்படவில்லை. அது பற்றிப் பல புகார்கள் வந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே விரைவாக அதைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அது திருப்பி அளிக்கப்பட்டு விட்டது என்று எனக்குத் தகவல் சொல்லப்பட்டு இருக்கிறது. தனியார் பள்ளிகளிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த வைப்பு நிதியை ரீஜினல் பிராவிடன்ட் பண்ட் கமிஷனர்தான் தரவேண்டும். அது நம் நிர்வாகத்தின்கீழ் வரவில்லை. பள்ளி நிர்வாகத்திலே உள்ளவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்கிறார்கள். நாமும் கூட அதுகுறித்து கேட்டுக்கொள்ளலாம்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர் ஆர். சி. நிர்மலா உயர்நிலைப் பள்ளியில் உள்ளவர்கள் இதற்காக விண்ணப்பித்து 2, 3 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதை உடனடியாக வழங்குமாறு உத்திரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, கொடுபட வேண்டிய இந்த 'அட்டா' பணம் அனைத்தும் தமிழக அரசுத் தரப்பிலிருக்கின்ற பள்ளிகளிலே கொடுக்கப்பட்டுவிட்டது, தனியார் பள்ளிகளிலேதான் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் பள்ளிகளிலே கொடுக்கப்படாமல் இருப்பதால்தான் அந்த ஆசிரியர்கள் அரசுக்கு விண்ணப்பிக்கிறார்கள். நாம் பள்ளிகளுக்கு மானியம் கொடுக்கிறபோது இந்தப் பிரச்சினையைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்த முறையிலே அது வழங்கப்படுவதற்கான உத்திரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு, தான் கொடுக்கிற கிராண்டிலே எதுவும் தருவதற்கு இல்லை. ஆனால் அதைத் தரவேண்டியவர் ரீஜினல் பிராவிடன்ட் பண்ட் கமிஷனர் தான். நாம் வேண்டுமென்றால் அவருக்குக் கடிதம் எழுதி சீக்கிரமாகத் தரப்படுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

Administration of Law Colleges.

* Q. 286—THIRU S. ANDITHEVAR: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the Government have received any communication from the Bar Council to the effect that none of the Law Colleges follow the norms prescribed regarding the legal education, regarding the construction of buildings, staff, strength and atendance of students; and